தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திரு சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப.,

ந.க. எண்.1006/2017/ப2

நாள்.21-07.2019

பொருள் : பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – திருநெல்வேலி மண்டலம் – தூத்துக்குடி மாவட்டம் – தமிழ்நாடு அமைச்சுப்பணி –2015–16 ஆண்டு தொகுப்பு IV பணித்தொகுதியில் உள்ளடங்கிய பணியிடங்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தோர் பட்டியல் பெறப்பட்டது – தூத்துக்குடி மாவட்ட பேரூராட்சி அலகில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டது – பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன் முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை :
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண்.5446/PSD-H2/2017 நாள் 19.09.2017
2. தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறைகள் ந.க.எண் 1006/2017/ப2 நாள் 16.11.2017
3. தொடர்புடைய ஆவணைணங்கள்

*****

ஆணை :

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் 2015–16 ஆண்டு தொகுதி IV பணித்தொகுதியில் உள்ளடங்கிய பணியிடங்களில் போட்டி தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்ட திரு பெ. கிளாமர் பார்வை–1–இல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் கடிதத்தின்படி தூத்துக்குடி மாவட்ட பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவரின் பார்வை–2–இல் காணும் செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.

மேற்படி பணியாளரின் பணி இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்கண்டவாறு வரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளரின் பெயர் | தற்போது பணிபுரிந்து வரும் பேரூராட்சி | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | திரு பெ. கிளாமர் | இளநிலை உதவியாளர் , ஆழ்வார்திருநகரி பேரூராட்சி | 05.12.2017 மு.ப | 05.12.2017 மு.ப |

மேலும் இப்பணிவரன்முறை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள2015–16 ஆண்டு தொகுதி IV போட்டி தேர்வு தொடர்புடைய வழக்குகளின் தீர்ப்புகளுக்கு உட்பட்டது.

மேற்காண் பணியாளரின் பணி வரன் முறை செய்யப்பட்ட விபரத்தினை சம்பந்தப்பட்ட பணியாளரின் பணி பதிவேட்டில் பதிவு செய்து அறிக்கை சமர்பிக்க ஆழ்வார்திருநகரி பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

மாவட்ட ஆட்சித் தலைவர்

பெறுபவர்
திரு பெ. கிளாமர்,
இளநிலை உதவியாளர்,
ஆழ்வார்திருநகரி பேரூராட்சி
(செயல் அலுவலர் மூலமாக)

நகல்
1. செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலகம், ஆழ்வார்திருநகரி
2. உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை தூத்துக்குடி
3. பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை–108
4. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-3
5. ப2 இருப்பு கோப்பு